இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 10.11.2026

# போலி நூல்களை நுழைத்த போலி அரசு!

ஒரு குற்றச்சாட்டு பொதுவெளியில் வைக்கப்படும் போது ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர் தன் முன் உள்ள கோப்புகளைப் பார்த்து அதன் உண்மைத்தன்மை என்ன என்பதை முதலில் ஆராய வேண்டும். முதலமைச்சர் பதவியில் இப்போது இருப்பவருக்கு அது மாதிரியான நடைமுறை எதுவும் தெரியாது. புரியவும் புரியாது என்பதால் வழக்கம் போல் வாய்க்கு வந்ததை அறிக்கை வாந்தி எடுத்தார்.

'பெரியார் அறிவுலகத்தில் ஊழல்' என்பதை நிறுவுவதன் மூலமாக பெரியாரையும், திராவிட மாடல் ஆட்சியையும், திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களையும் கொச்சைப்படுத்திவிட வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம்.

**கோவை பெரியார் அறிவுலகத்தை அக்டோபர் 16 ஆம் தேதியன்று ரிப்பன் வெட்டி திறந்து வைத்துவிட்டு ஓடி விட்டார் முதலமைச்சர் விஜய். அதன்பிறகு சமூக வலைதளங்களில் இளைஞர்கள், 'திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் பாரீர்' என்று பதிவுகள் போடத் தொடங்கினார்கள். 'இதுதான் திராவிட மாடல், இது போன்ற ஒன்றை விஜய் ஆட்சியால் அமைக்க முடியுமா?' என்று கேட்டார்கள்.**

**நவம்பர் 4 அன்று திராவிடர் கழகத்தின் சார்பில் மாபெரும் பாராட்டு விழா திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எடுக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாக அது அமைந்தது. அன்றைய தினம் கோவை சென்ற திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெரியார் அறிவுலகம் சென்று பார்வையிட்டார். அப்போது அங்கு கூடியிருந்த மாணவ, மாணவியரும், இளைஞர்களும் அவருக்கு கொடுத்த வரவேற்பு என்பது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. உற்சாக மிகுதியால் மாணவ, மாணவிகள் பலத்த கையொலி எழுப்பினார்கள். மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அனைவரிடமும் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார். அப்போது நூலகத்தில் படிக்க வந்திருந்த பலரும், திராவிட நாயகன் மு.க.ஸ்டாலினைப் பாராட்டி பேட்டிகள் கொடுத்தார்கள். இவற்றை எல்லாம் விஜய்யால் தாங்கிக் கொள்ள முடியுமா?**

பழிவாங்கக் காத்திருந்தவருக்கு, இந்த செய்தி வாய்ப்பாக அமைந்தது.

கழக ஆட்சியில் கோவை பெரியார் அறிவுலகத்துக்கு நூல்களை வாங்க தேர்வுக் குழு மிகமிகத் தகுதி வாய்ந்தவர்களால் அமைக்கப்பட்டது. 5.11.2025 அரசாணையை பார்த்தாலே தெரியும். அந்த அரசாணையே 34 பக்கம் கொண்டது. எவ்வளவு கவனத்தோடு நூல் தேர்வுக்குழுவை திராவிட மாடல் ஆட்சி அமைத்தது என்பதை அறியலாம்.

**இப்போது நூலகத்தில் போலியான நூல்கள் இருக்கிறது என்பதுதான் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு வந்ததும் இந்தத் துறையைக் கவனிப்பவர் கோவை பெரியார் அறிவுலக நூலகத்துக்குச் சென்றிருக்க வேண்டும். அங்குள்ள நூல்களில் போலியானவை எவை எனக் கணக்கெடுத்து பிரிக்க வேண்டும். இந்த நூல்களை வழங்கியவர் யார்? தயாரித்தவர் யார்? எழுதியவர் யார்? எனப் பார்த்து முதலில் கைது செய்திருக்க வேண்டும்.**

குறிப்பிட்ட நூலகத்தின் மீது நடவடிக்கையை எடுத்துவிட்டு, வாய் பேச வேண்டும். இது எதையும் முதலமைச்சர் விஜய்யோ, அமைச்சரோ செய்ய வில்லை. உடனடியாக, 'அறிவுலகத்தில் ஊழல்' என்று உளறத் தொடங்கி விட்டார்கள். ஏதாவது ஒன்று என்றால் 'தி.மு.க.வின் தவறு' என்று முதலில் சொல்லிவிட வேண்டும்.

இவர்கள் அளவுக்கு மீறி கூவியதற்கு இன்னும் சில காரணங்கள் இருக்கிறது. முந்தைய நாள் 5 ஆம் தேதியன்று ஒரு திருமணத்துக்கு முதலமைச்சர் விஜய், நடிகை திரிஷாவுடன் ஜோடியாகப் போனார். இதை விஜய் ரசிகர்களே சமூக வலைதளத்தில் கழுவி ஊற்றினார்கள். அவர்கள் எழுதி இருப்பது அனைத்தையும் இங்கு சொல்ல முடியாது. விஜய் ரசிகர்கள், ரசிகைகள் எழுதியவை அனைத்தும் அப்படி 'புகழ்பெற்ற' வார்த்தைகள். இதை மடைமாற்றம் செய்ய வேண்டும் என்பதும் த.வெ.க.வின் நோக்கம்.

புத்தகங்கள் கொள்முதல் முறைகேடு என்ற செய்தி வெளியான அன்று நடிகர் தனுஷின் புதிய படத்தின் இசை வெளியீட்டு விழா. இதை அமுக்க வேண்டும். இதற்காகத்தான் விஜய் அறிக்கை வெளியிட்டதும். ராஜ்மோகன் கூவியதும். 'திசை திருப்புகிறார்களாம்'. திசை திருப்பி மாட்டிக் கொண்டார்கள் என்பதே உண்மை.

**யோக்கியமான அரசாங்கம், போலிப் புத்தகங்களை உருவாக்கிய அகல்விளக்கு, மீனிக்ஸ் ஆகிய பதிப்பக உரிமையாளரை கைது செய்திருக்க வேண்டாமா? 5 நாட்கள் ஆகிவிட்டது. இன்னும் அவர் கைது செய்யப்படவில்லை. இதில் இருந்தே இந்த யோக்கிய சிகாமணிகளின் லீலைகள் தெரியவில்லையா?**

**'திராவிட மாடல்' ஆட்சியில் பரிந்துரைக் குழுவில் இருந்த பலரும், 'நாங்கள் பரிந்துரைத்த பட்டியலில் இந்த நூல்கள் இல்லை' என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் சர்ச்சைக்குரிய புத்தகங்களை பட்டியலில் இணைத்தது யார்?**

'தங்கள் மீது தவறு இல்லை' என்று சொல்லி விட்டு நூலகத்துறைக்கு பொறுப்பான ஐ.ஏ.எஸ். அதிகாரியை எதற்காக இடம் மாற்றம் செய்ய வேண்டும்?

**2026 மார்ச்சுக்குப் பிறகு தேர்தல் நடத்தைகள் தொடங்கிவிட்டது. மே 10 ஆம் தேதி முதலமைச்சராக விஜய் ஆட்சிக்கு வந்துவிட்டார். இன்று வைக்கப்பட்டுள்ள நூல்களில் தி.மு.க. ஆட்சியில் பிப்ரவரிக்கு முன் வாங்கப்பட்டவை எவை? அதன் பிறகு வாங்கப்பட்டவை எவை? இதை வெளிப்படையாகச் சொல்லுங்கள். வெள்ளைப் பேப்பரைக் காட்டிவிட்டு, இதுதான் ஆதாரம் என்றால் நம்புவதற்கு நாடே தற்குறி தேசமாக மாறிவிட்டதா?**

தவறான புத்தகம், போலியான தயாரிப்புகளை நீக்கி நடவடிக்கை எடுக்க யாரும் தடுக்கவில்லை. அதைச் செய்யுங்கள். அப்போதுதான் அந்த தவறைச் செய்தவர் யார் என்று தெரியும்.

'திரிஷா விஜய்' என்ற எழுத்தாளர் புத்தகத்தை யார் தேர்ந்தெடுப்பார்கள்? விஜய் பாலு, விஜய ஆதித்தன் என்றெல்லாம் போலி பெயர்களை யார் வைத்து, அரசாங்கத்தின் லாபத்தைப் பெறுவார்கள்? விஜய் பற்றிய ஆங்கில நூலை யார் எழுதி, உள்ளே நுழைப்பார்கள்? சாதாரண தற்குறியே இதற்கான விடையைச் சொல்லி விடும்.

**தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட டெண்டர்களை ரத்து செய்கிறீர்கள். நடைபெற்ற அனைத்தையும் ரத்து செய்கிறீர்கள். துருவித் துருவி ஆராய்ச்சி செய்கிறீர்கள். இந்த ஆறு மாத காலத்தில் அமைச்சர்கள் பலமுறை கோவை நூலகத்தை ஆய்வு செய்துள்ளார்கள். போலியான நூல்களை ஏன் த.வெ.க. ஆட்சியாளர்கள் கண்டுபிடிக்க வில்லை? ஏனென்றால் போலியான நூல்களை நுழைத்தவர்களே இவர்கள்தான்.**

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரிடம் தி.மு.க. சார்பில் புகார் தரப்பட்டுள்ளது. அதனை முறையாக விசாரிக்க இந்த அரசுக்கு யோக்கியதை இருக்கிறதா?**

●●





மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கலைஞானி, உலகநாயகன் கமல்ஹாசன் அவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.11.2026 அன்று நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார். அப்போது இந்தியத் திரையுலகில் தொடர்ந்து புதுமைகளைப் படைத்து வருவதோடு, அரசியல் களத்திலும் சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் குரலாக ஒலித்து வரும், கமல்ஹாசன் அவர்களின் பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். இந்தச் சந்திப்பின்போது, "ரெட் ஜெயன்ட் மூவீஸ்" தலைமை நிர்வாக இயக்குநர் (CEO) இன்பன் உதயநிதி அவர்களும் உடனிருந்தார்.

## ஒன்றிய அரசின் கோரிக்கை நிராகரிப்பு:

# 'கிரீமிலேயர்' வரம்பு உத்தரவை அமல்படுத்த 8 வாரம் கெடு!

## உச்ச நீதிமன்றம் உத்தரவு!

*புதுடெல்லி, நவ.10-* கிரீமிலேயர் வரம்பு தொடர்பான உத்தரவை அமல்படுத்த ஒன்றிய அரசு கேட்ட 2 ஆண்டு கால அவகாசத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகளில் பணியாற்றும் ஊழியர் களின் பிள்ளைகளுக்கு, அவர்களின் பெற்றோரின் சம்பள வருமானத்தை மட்டும் அடிப்படையாக வைத்து 'கிரீமிலேயர்' வரம்பு நிர்ணயம் செய் யப்பட்டு வந்தது.

இதனால் தங்களுக்கு ஒபிசி இடஒதுக்கீடு மறுக் கப்படுவதாக தெரிவித்து பாதிக்கப்பட்டவர்கள் உ ச் ச நீ தி ம ன் ற த் தி ல் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசா ரித்த உச்ச நீதிமன்றம், கடந்த மார்ச் 11ம் தேதி அன்று மிக முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கி யது.

அதில், 1993ம் ஆண்டு வெளியிடப்பட்ட அதி காரப்பூர்வ குறிப்பாணை யின் அடிப்படையில் பெற்றோரின் சமூக அந் தஸ்து மற்றும் வகிக்கும் பதவியை மட்டுமே அளவுகோலாகக் கொள்ள வேண்டும் என்று உத்தர விட்டது.

மேலும் அரசு ஊழியர் களுக்கு இணையாக பொதுத்துறை ஊழியர் களுக்கும் பதவி சம நிலையை உருவாக்கி, இந்த உத்தரவை 6 மாத காலத்திற்குள் ஒன்றிய அரசு அமல்படுத்த வேண் டும் என்றும் திட்டவட்ட மாக அறிவுறுத்தியிருந் தது.

இந்த சூழலில் இந்த வழக்கு நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா மற்றும் ஆர்.மகாதேவன் ஆகி யோர் அடங்கிய அமர் வில் மீண்டும் விசார ணைக்கு வந்தது.

அப்போது ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'இந்த தீர்ப்பை உடனே அமல் படுத்தினால் கடந்த கால பணி நியமனங்கள் பாதிக்கப்படும் என்ப தால், புதிய கொள்கையை வகுக்க 2 ஆண்டுகள் அவகாசம் தேவை' என்று வாதிட்டார்.

ஆனால் ஒன்றிய அர சின் இந்த கோரிக்கையை திட்டவட்டமாக நிராக ரித்த நீதிபதிகள், 'கொள்கை முடிவெடுக்க இவ்வளவு நீண்ட அவகாசம் வழங்க முடியாது என்பதால், கடந்த மார்ச் 11ம் தேதி தீர்ப்பை நடைமுறைப் படுத்த மேலும் 8 வாரங் கள் மட்டுமே கால அவ காசம் தருகிறோம்' என்று அதிரடியாக உத்தரவிட் டனர்.

அதேசமயம் ஏற்கனவே முடிவடைந்த பழைய நியமனங்கள் மாற்றப் படாது எனவும், முடிவு கள் இன்னும் முழுமை பெறாத 2025ம் ஆண்டுக் கான சிவில் சர்வீஸ் தேர் வுக்கு இந்த புதிய கிரீமி லேயர் விதிமுறை கட்டா யம் பொருந்தும் எனவும் நீதிபதிகள் தெளிவுபடுத் தினர்.

## மின் கட்டணம் - த.வெ.க. ஆட்சியில் நடக்கும் பகல் கொள்ளை!

# ரூ.1,500 மின் கட்டணம் கட்டிய குடும்பத்திற்கு ரூ.29,500 கட்டணம்!

## புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என வேதனை!

*சென்னை, நவ. 10 -* த.வெ.க. ஆட்சியில் மி ன் க ட் ட ண க் கொள்ளை நடைபெறு வதாக பொதுமக்கள் பலரும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

த.வெ.க. ஆட்சி வந்தது முதல் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர் மின்வெட்டு நிலவி வரு கிறது. ஆனால், மின்கட் டணங்கள் மட்டும் வழக்கத்தைவிட அதிக ரித்து வருகிறது.

இல்லாத கரண்ட் டுக்கு எப்படி கட்ட ணம் மட்டும் அதிக ரித்து வருகிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இந்நிலையில், வழக் கமாக ஆயிரத்து 500 ரூபாய் மின்கட்டணம் கட்டி வந்த குடும்பத்திற்கு தற்போது திடீரென 29 ஆயிரத்து 500 ரூபாய் கட்டணம் வந்துள்ளது.

இது தொடர்பாக மின்துறையில் புகார ளித்தும் எந்த நடவடிக் கையும் எடுக்கப்பட வில்லை என குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

விஜய் ஆட்சியில் பகல் கொள்ளையாக மின்கட்டணங்கள் வசூ லிக்கப்படுவதாகவும் புகார் கூறப்படுகிறது.

தொடர்ந்து பலரும் குற்றச்சாட்டை எழுப்பி வரும் நிலையில், செவி டன் காதில் சங்கு ஊதி யதுபோல் முதல்வர் விஜய் இருப்பதாகவும், மின்துறை அமைச்சரால் நாட்டு மக்களுக்கு எந்த பயனும் இல்லை என் றும் விமர்சித்து வருகின் றனர்.

## செங்கோட்டை வட்டம் – புளியறை பகுதியில்

# காட்டு யானை மிதித்துக் கொன்ற விவசாயிக் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கிடுவீர்!

## கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் கோரிக்கை!

*தென்காசி, நவ.10 -* தென்காசி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வன அலுவலர் ஆகியோ ருக்கு தென்காசி மாவட் டம் கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் தி.மு. இராசேந்திரன் அனுப்பி யுள்ள கோரிக்கை மனு வில் கூறியிருப்பதாவது:-



கடையநல்லூர் சட்ட மன்றத் தொகுதி, செங் கோட்டை வட்டம், புளி யறை பகுதியில் விவசாய நிலத்திற்கு சென்ற விவ சாயி சுப்பையா பிள்ளை அவர்களை நேற்று (09.11.2026) காலை சுமார் 9 மணி அளவில் காட்டு யானை மிதித்துக் கொன்று விட்ட செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் காட்டு விலங்குகளின் தொல்லை யால் அப்பகுதி மக்களும் விவசாயிகளும் ஒவ்வொரு நாளும் உயிர்ப் பயத் தோடும் அச்சத்தோடும் வாழும் நிலை கவலை அளிக்கிறது.

சட்டப் பேரவை யிலும் இது குறித்துப் பேசி யுள்ளேன்.

விவசாய நிலங்கள் மற்றும் மக்கள் நடமாட் டம் உள்ள கிராமப் பகுதி களில் காட்டு யானைகள், காட்டுப் பன்றிகள் ஊடுரு வல் தொடர்ந்து கொண்டி ருக்கிறது.

இதனால் விலை மதிப் பற்ற மனித உயிர் இழப் பும், பயிர்ச் சேதங்களால் பலத்த வருவாய் இழப்பும் விவசாயிகளுக்கு ஏற்படு கிறது. இது போன்ற துயரச் சம்பவங்கள் நிகழாமல் தடுக்க வனத் துறை யினர் 24 மணி நேரக் கண்கா ணிப்பை மேற்கொண்டு விலங்குகள் ஊடுருவலை முழுமையாகக் கட்டுப்ப டுத்துமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்காக கூடுதலாகத் தேவைப்படும் அதிநவீன கருவிகள், உபகரணங்கள், பணியாளர்கள் இவற்றை தமிழ்நாடு அரசு உடனே வழங்கிட முன்வர வேண் டும்.

இறந்த விவசாயி குடும்பத்திற்கு அரசின் நிவாரண நிதி முழுமை யாக கிடைத்திட உடனடி நடவடிக்கை மேற் கொள் ளவும் வேண்டு கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந் திரன் கூறியுள்ளார்.